www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsl8SS

**தென்காசி மாவட்டம்**
**முழு ஆண்டுத் தேர்வு - 2025**

**வகுப்பு 8**

கால அளவு: 2.30 மணிநேரம் **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) துணைப் படைத்திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?
அ) அயோத்தி ஆ) ஹைதராபாத் இ) உதய்பூர் ஈ) குவாலியர்

3) வேலுநாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?
அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி

4) **கூற்று** : ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்
**காரணம்** : அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்
அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு
ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

5) கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?
அ) வண்டல் மண் ஆ) கரிசல் மண் இ) செம்மண் ஈ) மலை மண்

6) சுனாமி என்ற சொல் ............ மொழியிலிருந்து பெறப்பட்டது
அ) ஹிந்தி ஆ) பிரெஞ்சு இ) ஜப்பானிய ஈ) ஜெர்மன்

7) சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம் ............
அ) ஜனவரி ஆ) டிசம்பர் இ) மார்ச் ஈ) மே

8) இந்தியக் கடலோரக் காவல்படை நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1976 ஆ) 1977 இ) 1978 ஈ) 1979

9) இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை ...........
அ) குடியரசுத்தலைவர் ஆ) நாடாளுமன்றம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) பிரதம அமைச்சர்

10) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியாசென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5×1=5**

11) இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி ............ ல் நடைபெற்றது
12) ............ ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது
13) அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் ............
14) மாவட்ட நீதிபதிகள் ............... ஆல் நியமிக்கப்படுகின்றனர்
15) தனியார் துறை ........... நோக்கத்தில் செயல்படுகிறது.

**III. பொருத்துக** **10×1=10**

16) அ)

| | | |
|---|---|---|
| i) | சால்பை உடன்படிக்கை | - அன்னிபெசன்ட் |
| ii) | டெல்லி | - ஏழு தீவு |
| iii) | கோத்தாரி கல்விக்குழு | - இரண்டாம் பகதூர்ஷா |
| iv) | பம்பாய் | - முதல் மராத்திய போர் |
| v) | பிரம்ம ஞான சபை | - 1964 |
| | | - 1956 |

17) ஆ)

| | | |
|---|---|---|
| i) | பசால்ட் (கருங்கல்) | - புவிப்படத்தின் திறவு கோல் |
| ii) | காலநிலை | - மூலப்பொருட்கள் |
| iii) | இழுக்காரணி | - வேலைவாய்ப்புகள் |
| iv) | புவியியல் காரணிகள் | - வேலை வாய்ப்பின்மை |
| v) | புவிப்பட விளக்கம் | - நீண்ட நாளைய மாற்றங்கள் |
| | | - உருமாறியப் பாறைகள் |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**IV. சரியா/தவறா எனக் குறிப்பிடுக** 5×1=5

18) ஆனந்தரங்கம் பிரிட்டிஷ் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்
19) 1799 அக்டோபர் 16 ஆம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்
20) படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன
21) அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது
22) 1951 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் நாள் இந்திய உச்சநீதிமன்றம் தொடங்கப்பட்டது

**V. ஏதேனும் பத்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.** 10×2=20

23) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக
24) இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக
25) தென்னிந்திய புரட்சியில் பாளையக்காரர் கூட்டமைப்பின் தலைவர்கள் யாவர்?
26) நகர்ப்புற பகுதி என்றால் என்ன?
27) பெண்களின் முன்னேற்றத்திற்காக போராடிய முக்கிய தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக
28) மண்ணின் வகைகளைக் கூறுக?
29) உலகில் அதிக மக்கள் தொகைக் கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக
30) ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?
31) 'புவிப்பட அளவை' - வரையறு
32) முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
33) சமயச்சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது?
34) சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக
35) பண்டமாற்று முறை என்றால் என்ன?
36) பொதுத்துறையின் நோக்கங்களை எழுதுக

**VI. விரிவான விடையளி. (ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி)** 7×5=35

37) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக
38) 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களை எழுதுக
39) சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கினைக் கண்டறியவும்
40) **வேறுபடுத்துக.**
i) உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்
ii) காலநிலை மற்றும் வானிலை
**காரணம் கூறுக.** தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது
41) நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க
42) தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விளக்குக
43) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி
44) இந்தியா போன்ற நாட்டிற்குச் சமயச் சார்பின்மை அவசியம் நிரூபிக்கவும்
45) பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகளை எழுதுக
46) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**VII. 48) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்** 5×1=5

i) ஆஸ்திரேலியா
ii) ஜப்பான்
iii) கனடா
iv) இந்தியப்பெருங்கடல்
v) பிரேசில்

**49) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.** 10×1=10

i) புதுடெல்லி
ii) லக்னோ
iii) ஜாம்ஷெட்பூர்
iv) அஸ்ஸாம்
v) மதுரை
vi) காஞ்சிபுரம்
vii) ஜான்சி
viii) திருவாங்கூர்
ix) காஷ்மீர்
x) வந்தவாசி

- - - - - -

Padasalai.Net